***சிறுவர் பாதுகாப்புக் கொள்கை***

***<u>கொள்கை:</u>***

*சிறுவர் பாதுகாப்புக் கொள்கையானது, நூலகத்தைப் பார்வையிடும் ஒவ்வொரு பிள்ளைக்கும் பராமரிப்பாளருக்கும் பாதுகாப்பான மற்றும் நேர்மறையான அனுபவத்தை வழங்குதல் என்ற அலமேடா கவுண்டி நூலகத்தின் இலக்கை ஆதரிக்கிறது. இந்த நூலகமானது பிள்ளைகளைக் கண்காணிக்கும் பணியையோ அல்லது பெற்றோரின் பணியையோ செய்வதில்லை என்பதால், இந்தச் சிறுவர் பாதுகாப்புக் கொள்கை வழிகாட்டுதல்கள், நூலகத்தில் கண்காணிப்பு இல்லாத சந்தர்ப்பங்களில் பிள்ளைகளை வழிநடாத்த ஊழியர்களுக்கு உதவுகின்றன. அவை பின்வரும் நிலைமைகளுக்கான வழிகாட்டுதலை வழங்குகின்றன: கவனிப்பாரற்றிருக்கும் பிள்ளைகள், பாதுகாப்பு அவசரநிலைகள் மற்றும் நூலகம் மூடப்படும் போது அல்லது மூடப்பட்ட பின்னர் தனித்து விடப்பட்டிருக்கும் பிள்ளைகள்.*

***<u>கொள்கைக்கான காரணம்:</u>***

*கவனிப்பாரற்று இருக்கும் பிள்ளைகள் அச்சமடைந்திருக்கலாம் அல்லது தங்களுக்கு தாங்களே அல்லது பிறருக்கு ஆபத்தை உருவாக்கும் விதத்தில் தொந்தரவாகச் செயல்படலாம். தங்கள் பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்கு பெற்றோர்கள், பாதுகாவலர்கள் மற்றும் நியமிக்கப்பட்ட பராமரிப்பாளர்களே பொறுப்பானவர்களாவர்.*

***<u>பிரயோகங்களுக்கான வரைவிலக்கணங்கள்:</u>***

***நியமிக்கப்பட்ட பராமரிப்பாளர்கள்:*** *கீழே உள்ள வழிகாட்டுதல்களின் நோக்கத்திற்காக, நியமிக்கப்பட்ட பராமரிப்பாளர் என்பவர் எட்டு அல்லது அதற்கு குறைவான வயதுடைய ஒரு பிள்ளையை மேற்பார்வையிடும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட 16 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய ஒருவராக வரையறுக்கப்படுகிறார். நூலக ஊழியர்களோ அல்லது அதன் தன்னார்வலர்களோ பிள்ளைகளுக்கான நியமிக்கப்பட்ட பராமரிப்பாளர்களாக செயல்படுவதில்லை.*

***<u>வழிகாட்டுதல்கள்:</u>***

***<u>கவனிப்பாரற்ற பிள்ளைகள்:</u>***

*திறந்திருக்கும் நேரங்களில், எட்டு அல்லது அதற்கு குறைவான வயதுடைய பிள்ளையை மேற்பார்வையிடுவது பெற்றோர், சட்டப்பூர்வ பாதுகாவலர் அல்லது பதினாறு அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய நியமிக்கப்பட்ட பராமரிப்பாளரின் பொறுப்பாகும். சிறு பிள்ளைகள், குறிப்பாக தங்கள் முதல் மற்றும் கடைசிப் பெயர்கள், தமது தொலைபேசி எண் மற்றும் அவர்கள் நூலகத்திற்கு வந்த நபரின் பெயரைத் தெரியாதவர்கள், தங்களை அழைத்து வந்த பராமரிப்பாளருக்கு எப்போதும் தெரியும் இடத்தில் இருத்தல் வேண்டும்.*

*நூலகத்தில் கவனிப்பாரற்றிருக்கும் பிள்ளைகளை நூலக ஊழியர்களால் பராமரிக்கவோ, பார்க்கவோ அல்லது பொறுப்பேற்கவோ முடியாது. நூலகத்தில் இருக்கும் போது, நூலகத்தின் நடத்தைக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நடத்தை வழிகாட்டுதல்களை பிள்ளைகள் கடைப்பிடிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கவனிப்பாரற்ற பிள்ளைகள் மற்றவர்களின் நூலக அனுபவத்தை சீர்குலைக்கலாம். மற்றவர்களுக்கான நூலகச் சேவையை சீர்குலைக்கும், பாதுகாப்பற்ற*

*நிலைமைகளுக்கு பங்களிக்கும் அல்லது நூலக ஊழியர்கள் தங்கள் பணிகளைச் செய்யத் தடையாக இருக்கும் மைனர்கள் உள்ளிட்ட உறுப்பினர்கள், நூலகத்தை விட்டு வெளியேறும்படி கேட்கப்படலாம்.*

*பாதுகாப்புக் காரணங்களுக்காக, எட்டு அல்லது அதற்கு குறைவான வயதுடைய இடையூறு விளைவிக்கும் பிள்ளை மேற்பார்வையின்றி இருந்தால், நூலகப் பணியாளர்கள் உடனே அவர்களை நூலகத்திலிருந்து வெளியேறுமாறு கோராமல், பெற்றோரை, சட்டப்பூர்வ பாதுகாவலரை அல்லது நியமிக்கப்பட்ட பராமரிப்பாளரை தொடர்புகொள்ள முயற்சிப்பதுடன் அவ்வாறு செய்யும் போது பிள்ளையுடன் இருப்பதற்கு முயற்சிப்பார்கள். பெற்றோரை, சட்டப்பூர்வ பாதுகாவலரை அல்லது நியமிக்கப்பட்ட பராமரிப்பாளரை நியாயமான நேரத்திற்குள் தொடர்புகொள்ள முடியவில்லை என்றால், ஊழியர்கள் உள்ளூர் காவல்துறையை அல்லது சிறுவர் பாதுகாப்பு சேவைகளை அழைக்கலாம்.*

***<u>அவசரநிலைகள்:</u>***

*அவசரகால சூழ்நிலைகளில் பெற்றோரை, சட்டப்பூர்வ பாதுகாவலரை அல்லது பிற நியமிக்கப்பட்ட பராமரிப்பாளரை அணுக முடியாத போது, நூலக ஊழியர்கள் உள்ளூர் காவல்துறையை அல்லது அவசர சேவைகளை தொடர்பு கொள்ளலாம். இதற்கான உதாரணங்கள்:*

- *பிள்ளைகள் நோய்வாய்ப்படுதல்*
- *தங்களுக்குத் தாங்களே அல்லது பிறருக்கு ஆபத்தை விளைவிக்கும் பிள்ளைகள்*

*அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் பிள்ளைகள்*

***<u>மூடும் நேரத்தில் கவனிப்பாரற்றிருக்கும் மைனர்கள்:</u>***

*நூலகத்தை மூடும்போது விட்டுவிடப்பட்டிருக்கும் மைனர்களுக்கு நூலக ஊழியர்களின் பொறுப்பு இல்லை. ஊழியர்கள் பிள்ளையின் பெற்றோரை, சட்டப்பூர்வ பாதுகாவலரை அல்லது பராமரிப்பாளரை முடிந்தால் அழைக்க முயற்சிப்பார்கள், மேலும் நூலகத்தை மூடிய பிறகு மற்றொரு ஊழியருடன் பதினைந்து நிமிடங்கள் காத்திருந்து பிள்ளையின் பராமரிப்பாளரைத் தொடர்புகொள்வார்கள். பெற்றோர், சட்டப்பூர்வ பாதுகாவலர் அல்லது பராமரிப்பாளர் பிள்ளையை மீட்டெடுக்கப்படாவிட்டால் அல்லது அவர்களை ஊழியர்களால் தொடர்புகொள்ள முடியாவிட்டால், நூலக ஊழியர்கள் உள்ளூர் காவல்துறையைத் தொடர்புகொண்டு பிள்ளையைப் பொறுப்பேற்குமாறு கோருவார்கள்.*